ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது
අංක 2181/21 - 2020 ජූනි මස 25 වැනි බ්‍රහස්පතින්දා - 2020.06.25
*2181/21 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு யூன் மாதம் 25 ஆந் திகதி வியாழக்கிழமை*
(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச. வ. பி. 15/ 2014*

**2014 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க, நிர்மாணத்தொழில் அபிவிருத்திச் சட்டம்**

*2014 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க, நிர்மாணத் தொழில் அபிவிருத்திச் சட்டத்தின் 49 ஆம் பிரிவின் (1) ஆம் உப்பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் மேற்கூறப்பட்ட சட்டத்தின் 58 ஆம் பிரிவின் கீழ் நகர அபிவிருத்தி, நீர் வழங்கல் மற்றும் வீடமைப்பு வசதிகள் அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.*

**மஹிந்த ராஜபக்ஷ,**
நகர அபிவிருத்தி, நீர் வழங்கல் மற்றும் வீடமைப்பு வசதிகள் அமைச்சர்.

கொழும்பு,
*2020, யூன் 08.*

ஒழுங்குவிதிகள்

1. இவ்வொழுங்குவிதிகள் 2020 ஆம் ஆண்டின் நிர்மாணத் தொழில் அபிவிருத்தி (நிர்மாணத் தொழிலில் தேர்ச்சிபெற்ற நிர்மாண வேலையாளர்கள், நிர்மாண அமைவிட மேற்பார்வையாளர்கள், நடுமட்டத் தொழில்நுட்ப அலுவலர்கள் மற்றும் ஏனைய உயர் தொழிலார்கள் பற்றிய இடாப்பு) ஒழுங்குவிதிகள் என எடுத்துக்காட்டப்படலாம்.

2. (இதனகத்துப்பின்னர் "அதிகாரசபை" எனக் குறிப்பீடு செய்யப்படும்) நிர்மாணத் தொழில் அபிவிருத்தி அதிகார சபையானது, (இதனகத்துப் பின்னர் "இடாப்பு" எனக் குறிப்பீடு செய்யப்படும்) நிர்மாணத் தொழிலில் தேர்ச்சிபெற்ற நிர்மாண வேலையாளர்கள், நிர்மாண அமைவிட மேற்பார்வையாளர்கள், நடுமட்டத் தொழில்நுட்ப அலுவலர்கள் மற்றும் வேறெவரேனும் உயர் தொழிலர்கள் பற்றிய இடாப்பொன்றைப் பேணுதல் வேண்டும்.

1A – PG 5006 – 517 (2020/06)
இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

*3.* இடாப்பானது நிர்மாணத் தொழிலில் தேர்ச்சிபெற்ற நிர்மாண வேலையாளர்கள், நிர்மாண அமைவிட மேற்பார்வையாளர்கள், நடுமட்டத் தொழில்நுட்ப அலுவலர்கள் மற்றும் ஏனைய உயர் தொழிலர்கள் பற்றி பின்வருவனவற்றைக் கொண்டிருத்தல் வேண்டும் :-

(அ) பெயர்கள் ;

(ஆ) தொடர்பு விபரங்கள் ;

(இ) தேர்ச்சிகள் இயைபான எந்த உயர் தொழிலில் அல்லது தொழிலில் அல்லது கைவினைத் தொழிலில் உள்ளனவோ அந்த இயைபான உயர் தொழில் அல்லது தொழில் அல்லது கைவினைத் தொழில் ;

(ஈ) பதிவு செய்யப்பட்ட வகுதியும் விசேடித்த துறையும் ;

(உ) பதிவிலக்கம் ; அத்துடன்

(ஊ) பதிவுத் திகதியும் நடப்புப் பதிவுக் காலப்பகுதியும்.

*4.* இடாப்பானது, நிர்மாணத் தொழிலில் தேர்ச்சிபெற்ற நிர்மாண வேலையாளர்கள், நிர்மாண அமைவிட மேற்பார்வையாளர்கள், நடுமட்டத் தொழில்நுட்ப அலுவலர்கள் மற்றும் ஏனைய உயர் தொழிலர்கள் பற்றிய விபரக்கொத்து ஒன்றாகக் கொள்ளப்படுதல் வேண்டுமென்பதுடன் அலுவலக நேரங்களின் போது பொது மக்களினால் பார்வையிடவும்படலாம்.

5. இவ்வொழுங்குவிதிகளில்-

"நிர்மாணத் தொழிலிலுள்ள ஏனைய உயர் தொழிலர்கள்" என்பது, 2014 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க, நிர்மாணத் தொழில் அபிவிருத்திச் சட்டத்திற் குறிப்பீடு செய்யப்பட்ட தகைமைபெற்ற ஆளொருவர் தவிர, இயைபான உயர் தொழிற்சார் குழுவின் கீழ் உயர் தொழில் ரீதியில் ஏற்றங்கீகரிக்கப்பட்ட ஆளொருவர் என்று பொருளாகும்.

*07-251*

---

*ச. வ. பி. 15/2014*

**2014 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க, நிர்மாணத் தொழில் அபிவிருத்திச் சட்டம்**

*2014 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க, நிர்மாணத் தொழில் அபிவிருத்திச் சட்டத்தின் 48 ஆம் பிரிவின் (6) ஆம் உட்பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் மேற்கூறப்பட்ட சட்டத்தின் 58 ஆம் பிரிவின் கீழ் நகர அபிவிருத்தி, நீர் வழங்கல் மற்றும் வீடமைப்பு வசதிகள் அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.*

**மஹிந்த ராஜபக்ஷ,**
நகர அபிவிருத்தி, நீர் வழங்கல் மற்றும் வீடமைப்பு வசதிகள் அமைச்சர்.

கொழும்பு,
*2020, யூன் 08.*

ஒழுங்குவிதிகள்

*1.* இவ்வொழுங்குவிதிகள் 2020 ஆம் ஆண்டின் நிர்மாணத்தொழில் அபிவிருத்தி (கைவினைத் தொழில் அடையாள அட்டைகள்) பற்றிய ஒழுங்குவிதிகள் என எடுத்துக்காட்டப்படலாம்.

*2.* ஒவ்வொரு கைவினைத்தொழில் அடையாள அட்டை வைத்திருப்பவரும்-

(அ) 2014 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க, நிர்மாணத் தொழில் அபிவிருத்திச் சட்டத்தின் எவையேனும் ஏற்பாடுகளை அல்லது அதன் கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதியை அல்லது விதிகளை மீறுதலாகாது ;

(ஆ) அத்தகைய கைவினைத் தொழில் அடையாள அட்டை வைத்திருப்பவர் எந்த வகுதியின் கீழ் மற்றும் கைவினைத் தொழிலின் கீழ் நிர்மாணத் தொழில் அபிவிருத்தி அதிகார சபையுடன் பதிவு செய்யப்பட்டுள்ளாரோ அந்த வகுதியிலும் தரத்திலும் மட்டுமே தொழில் புரிதல் வேண்டும் ;

(இ) ஏதேதனும் சாதனம் மற்றும் முறைகள் தொடர்பாகத் தகுந்த காப்புப் பயிற்சிக்கு உட்படுவதனை உறுதிப்படுத்துவதன் மூலம் காப்பற்ற வேலை நிலைமைகளை ஒழிப்பதில் உதவுதல் வேண்டும் ; அத்துடன்

(ஈ) அமைவிடங்களில் காப்பு வழிமுறைகளுக்கு அமைந்தொழுகுதல் வேண்டும்.

3. ஒவ்வொரு கைவினைத்தொழில் அடையாள அட்டை வைத்திருப்பவரும் இதற்கான அட்டவணையில் தரப்பட்டுள்ள நடத்தைக் கோவைக்கு இணங்கியொழுகும்படி தேவைப்படுத்தப்படுதல் வேண்டும்.

**அட்டவணை**

(ஒழுங்குவிதி 3)

**கைவினைத் தொழில் அடையாள அட்டை வைத்திருப்போருக்கான நடத்தைக் கோவை**

ஒவ்வொரு கைவினைத் தொழில் அடையாள அட்டை வைத்திருப்பவரும்-

(அ) அவரது தொழில் கொடுக்கல் வாங்கல்களில் நியாயமாகவும் நேர்மையாகவும் நடப்பதன் மூலம் நிர்மாணத் தொழிலின் கௌரவத்தையும் மாண்பையும் போற்றிக்காத்தல் வேண்டும் ;

(ஆ) இயைபான தொழிலில் அதியுச்ச நியமங்களையும் தரங்களையும் பேணுதல் வேண்டும் ;

(இ) குறித்தளிக்கப்பட்ட வேலையை நிறைவேற்றுகையில் உயர்வான முறைமையியற்சார் மட்டத்தைப் பேணுதல் வேண்டுமென்பதுடன் தரமான சேவையுடன் அவரது பொறுப்பேற்புகளைப் புரிதலும் வேண்டும் ;

(ஈ) ஏனைய கைவினைத் தொழில் அடையாள அட்டை வைத்திருப்பபோருடன் சிறந்த புரிந்துணர்வை வளர்த்தல் வேண்டுமென்பதுடன் அவர்களுடன் கொடுக்கல் வாங்கல்களை நடாத்தும்போது மாண்புடனும் கௌரவத்துடனும் நடந்துகொள்ளுதலும் வேண்டும் ;

(உ) நிர்மாணத் தொழிலின் பாதுகாப்புக்காகவும் முன்னேற்றத்துக்காகவும் ஏனைய கைவினைத் தொழில் அடையாள அட்டை வைத்திருப்போருடன் ஒத்துழைத்தல் வேண்டும் ;

(ஊ) தொழில் ஒப்பந்தத்தின் ஒப்பந்தஞ்சார் கடப்பாடுகளை நிறைவேற்றுதல் வேண்டும் ;

(எ) வேலையை நிறைவேற்றுகையில் தொழில்தருநர்கள், ஊழியர்கள், ஒப்பந்தக்காரர்கள், கீழொப்பந்தக்காரர்கள் மற்றும் சக வேலையாளர்கள் என்போர் தொடர்பில் நியாயமானதும் நீதியானதுமானவொரு முறையில் செயலாற்றுதல் வேண்டும் ;

(ஏ) அமைவிடங்களினுள் காப்புச் செயல்முறைகளைக் கடைப்பிடித்தல் வேண்டுமென்பதுடன் நிர்மாண வேலையிலிருந்து தோற்றுவிக்கப்படுகின்ற எவையேனும் சுகாதார இடையூறுகளைத் தடுப்பதற்கு ஒவ்வொரு முற்காப்பையும் எடுத்தலும் வேண்டும் ;

(ஐ) அவரது நற்பெயர், நடத்தை அல்லது செயல்முறைகள், நிர்மாணத் தொழிலுக்கு அல்லது பொது மக்களுக்குப் பாதகமாகவிராத அல்லது தீங்கு விளைவிக்காத ஒரு முறையில் செயலாற்றுதல் வேண்டும் ;

(ஒ) உயர் தொழிற்சார் குழுக்கள், தொழில்நுட்ப நிறுவனங்கள், ஏதேனும் கைவினைத் தொழிலர் கழகம் அல்லது வேறேதேனும் தொடர்புபட்ட ஒழுங்கமைப்பு என்பனவுட்பட ஏனைய அக்கறை கொண்டுள்ளோரை ஏற்றங்கீகரித்தலும், அவர்களுக்கு மதிப்புக் கொடுத்தலும், அவர்களுடன் ஒத்துழைத்தலும், அவர்களுடன் சுமுகமான முறையில் பணியாற்றுதலும் வேண்டும் ;

(ஓ) சூழற் பாதுகாப்புடன் தொடர்புபட்ட எல்லா ஏற்புடையற்பாலனவான சட்டங்களுக்கும் ஒழுங்குவிதிகளுக்கும் இணங்கியொழுகுதல் வேண்டும்.

07-252

*ச. வ. பி. 15/2014*

**2014 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க, நிர்மாணத் தொழில் அபிவிருத்திச் சட்டம்**

*2014 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க, நிர்மாணத் தொழில் அபிவிருத்திச் சட்டத்தின் 32 ஆம் பிரிவின் (5) ஆம் உட்பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் மேற்கூறப்பட்ட சட்டத்தின் 58 ஆம் பிரிவின் கீழ் நகர அபிவிருத்தி, நீர் வழங்கல் மற்றும் வீடமைப்பு வசதிகள் அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.*

**மஹிந்த ராஜபக்ஷ,**
நகர அபிவிருத்தி, நீர் வழங்கல் மற்றும் வீடமைப்பு வசதிகள் அமைச்சர்.

கொழும்பு,
*2020, யூன் 08.*

ஒழுங்குவிதிகள்

1. இவ்வொழுங்குவிதிகள் 2020 ஆம் ஆண்டின் நிர்மாணத் தொழில் அபிவிருத்தி (தகைமைபெற்ற ஆட்களுக்கான ஒழுக்காற்று நடவடிக்கைமுறை) ஒழுங்குவிதிகள் என எடுத்துக்காட்டப்படலாம்.

2. இவ்வொழுங்குவிதிகள், ஏதேனும் உயர் தொழிற்சார் குழுவின் உறுப்பினரொருவராகவிராதவரும் அல்லது ஒரு பாராளுமன்றச் சட்டத்தினால் தாபிக்கப்பட்டு நிர்மாணத் தொழில் தொடர்பான ஏதேனும் பதிவுச்சபையின் கீழ் பதிவு செய்யப்பட்ட ஆளொருவராகவிராதவரும் 2014 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க, நிர்மாணத் தொழில் அபிவிருத்திச் சட்டத்தின் 26 ஆம் பிரிவின் கீழ் பதிவு செய்யப்பட்டவரும் (இதனகத்துப் பின்னர் "தகைமைபெற்ற ஆள்" எனக் குறிப்பீடு செய்யப்படுபவருமான) தகைமைபெற்ற ஆளொருவருக்கெதிரான ஏதேனும் முறைப்பாட்டுக்கு ஏற்புடையனவாதல் வேண்டும்.

3. நிர்மாணத் தொழில் அபிவிருத்திச் சட்டத்தின் 32(1) ஆம் பிரிவிற் குறித்துரைக்கப்பட்ட கருமங்கள் தொடர்பாக 2 ஆம் ஒழுங்குவிதியிற் குறித்துரைக்கப்பட்ட தகைமைபெற்ற ஆளொருவருக்கெதிராக முறைப்பாடொன்றைச் செய்வதற்கு விரும்புகின்ற எவரேனுமாள் (இதனகத்துப் பின்னர் "பணிப்பாளர் தலைமையதிபதி" எனக் குறிப்பீடு செய்யப்படும்) நிர்மாணத் தொழில் அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளர் தலைமையதிபதியினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறானவொரு படிவத்தில், ஐயாயிரம் ரூபாப் பணத்தொகையினதான கட்டணத்துடனும் முறைப்பாட்டில் குறிப்பிடப்பட்ட நிகழ்வுகளை ஆதாரப்படுத்தும் சத்தியக் கடதாசியுடனும் இயைபான ஆவணங்களுடனும் சேர்த்து அத்தகைய முறைப்பாட்டைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

4. முறைப்பாட்டைப் பெற்றதன் மேல், பணிப்பாளர் தலைமையதிபதி, ஏழு வேலை நாட்களைக் கொண்ட காலப்பகுதியொன்றினுள் அதிகார சபையின் புலனாய்வுக் குழுவொன்றுக்கு அதன் அந்தரங்கமான அறிக்கைக்காக அத்தகைய முறைப்பாட்டை ஆற்றுப்படுத்துதல் வேண்டும்.

5. (1) அதிகார சபையானது, 4 ஆம் ஒழுங்குவிதியில் குறிப்பீடு செய்யப்பட்ட புலனாய்வுக் குழுவினை நியமித்தல் வேண்டும். அது அதிகார சபையின் உயர் தொழில்சார் குழாமிலிருந்து பெயர் குறித்து நியமிக்கப்பட்ட மூன்று உறுப்பினர்களைக் கொண்டிருத்தலும் வேண்டும்.

(2) பணிப்பாளர் தலைமையதிபதியினால் அதற்கு குறிப்பீடு செய்யப்பட்ட முறைப்பாடு ஒன்றினைப் பெற்றுக்கொண்டதன் மேல் புலனாய்வுக் குழுவானது புலனாய்வு நோக்கத்துக்காக–

(அ) அதிகார சபை ஊடாக இரு திறத்தவர்களிடமிருந்து அவசியமாயின் மேலாதிகச் சான்றை அல்லது தகவலைக் கோருதல் வேண்டும் அல்லது மேலதிகச் சான்று அல்லது தகவல் இல்லாதபோது முறைப்பாட்டை மேற்கொண்டு நடாத்துதலும் வேண்டும் ; அத்துடன்

(ஆ) எவரேனும் தகைமை வாய்ந்த ஆளினால் சமர்ப்பிக்கப்பட்ட ஏதேனும் எழுத்திலான முறையீடுகள் மற்றும் சான்று உட்பட அதற்கு வழங்கப்பட்ட சான்றைக் கவனத்திற்கொள்ளுதல் வேண்டும்.

6. புலனாய்வுக் குழுவானது, அதற்கு முறைப்பாடு ஆற்றுப்படுத்தப்பட்ட திகதியிலிருந்து ஐம்பத்தாறு வேலை நாட்களைக் கொண்டவொரு காலப்பகுதியினுள் பணிப்பாளர் தலைமையதிபதிக்கு அந்தரங்கமான அறிக்கையொன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

7. அந்தரங்கமான அறிக்கையானது, கடைப்பிடிக்கப்பட்ட நடவடிக்கை முறை பற்றிய தகவல்களையும் புலனாய்வின் முடிவெடுப்புகள் மற்றும் இயைபான தகவல்கள் என்பவற்றையும் புலனாய்வுக் குழுவின் விதப்புரைகளுடன் சேர்த்து கொண்டிருத்தல் வேண்டும்.

8. பணிப்பாளர் தலைமையதிபதி அந்தரங்கமான அறிக்கையையும் இயைபான எல்லா ஆவணங்களையும் தீர்மானத்துக்காக ஒழுக்காற்றுக் குழுவொன்றுக்கு ஆற்றுப்படுத்துதல் வேண்டும்.

9. (1) அதிகார சபையானது 8 ஆம் ஒழுங்குவிதியில் குறிப்பீடு செய்யப்பட்ட ஒழுக்காற்றுக் குழுவை நியமித்தல் வேண்டும். இது அதிகார சபையின் உயர் தொழில்சார் குழாமிலிருந்து பெயர் குறித்து நியமிக்கப்பட்ட மூன்று உறுப்பினர்களாக கொண்டிருத்தல் வேண்டும்.

(2) ஒழுக்காற்றுக் குழுவானது, அந்தரங்கமான அறிக்கை பெறப்பட்ட திகதியிலிருந்து பதினான்கு வேலை நாட்களைக் கொண்டவொரு காலப்பகுதியினுள் கூடுதல் வேண்டுமென்பதுடன் அத்தகைய அந்தரங்கமான அறிக்கையைப் பரிசோதனை செய்தலும் வேண்டும்.

10. (1) ஒழுக்காற்றுக் குழுவானது, இடாப்பில் பதியப்பட்டவாறான முகவரிக்கு விசாரணை பற்றிய அறிவித்தலொன்றை அதிகார சபையினூடாகப் பதிவுசெய்யப்பட்ட தகைமைபெற்ற ஆளுக்கு இடாப்பில் பதியப்பட்டவாறான முகவரிக்கு அனுப்புதல் வேண்டும்.

(2) விசாரணை பற்றிய அறிவித்தல்-

(அ) பதிவுசெய்யப்பட்ட தகைமை பெற்ற ஆள் பற்றி பெறப்பட்ட தகவல்களின் பிரதியொன்றை உள்ளடக்கி, புலனாய்வுக் குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட்ட சார்த்துதல்களை எடுத்துக்கூறுதல் வேண்டும் ;

(ஆ) புலனாய்வுக் குழு ஆற்றுப்படுத்துகையை எத்திகதியன்று கவனத்திற்கொள்ளுவதற்குள்ளதோ அத்திகதி பற்றி தகைமை பெற்ற ஆளுக்கு அறிவித்தல் வேண்டும் ;

(இ) அதன்கண் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியினுள் ஆற்றுப்படுத்தப்பட்ட கருமங்கள் தொடர்பாக எழுத்திலான முறையீடுகளைச் செய்யும்படி பதிவுசெய்யப்பட்ட தகைமை பெற்ற ஆளைக் கோருதல் வேண்டும்.

(3) ஒழுக்காற்றுக் குழுவானது, முறைப்பாட்டாளரையும் எந்த தகைமைபெற்ற ஆளுக்கெதிராக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதோ அந்த தகைமை பெற்ற ஆளையும், அதன்கண் குறித்துரைக்கப்பட்ட திகதியன்று ஒழுக்காற்றுக் குழுவின் முன்னர் தோன்றும்படி அதிகார சபையினூடாக அறிவித்தல் வேண்டும்.

11. தகைமைபெற்ற ஆளொருவர்-

(அ) நேரடியாகத் தோன்றலாம் ; அல்லது

(ஆ) நேரடியாகத் தோன்றியிருக்கையில் ஓர் இணைந்த உயர் தொழிலரினால் பிரதிநிதித்துவம் வகிக்கப்படலாம்.

12. முறைப்பாட்டாளரும் தகைமை பெற்ற ஆளும், ஒன்றில் வாய்மொழி மூலம் அல்லது எழுத்திலான வடிவத்தில் சான்றளிக்கலாமென்பதுடன் மூலச் சமர்ப்பணத்தில் வெளிப்படுத்தப்பட்டவாறாக எவரேனும் சாட்சியை முன்னிறுத்துவதற்கு உரித்துடையவர்களாதலும் வேண்டும்.

13. தகைமை பெற்ற ஆள் அல்லது அவரது பிரதிநிதி முறைப்பாட்டாளரை அல்லது வேறெவரேனும் சாட்சியைக் குறுக்கு விசாரணை செய்வதற்கு உரித்துடையவராதல் வேண்டும். அத்தகைய குறுக்கு விசாரணை, புலனாய்வின் கீழுள்ள விடயத்துக்கு வரையறுக்கப்படுதல் வேண்டும்.

14. ஒழுக்காற்றுக் குழுவானது, விசாரணையின் விடயப்பொருளுக்கு இயைபற்றனவான, அல்லது அவமதிப்பான, அற்பத்தன்மையினவான அல்லது வடிவத்தில் தேவையற்ற முறையில் தீங்கு விளைவிப்பனவான கேள்விகளுக்கு அனுமதி மறுப்பதன் மூலம், சாட்சிகளின் விசாரணையையும் குறுக்கு விசாரணையையும் மட்டுப்படுத்துவதற்கான தத்துவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

15. கேட்பு நிறைவு செய்யப்பட்டதன் மேல், ஒழுக்காற்றுக் குழுவானது, புலனாய்வுக் குழுவின் அந்தரங்கமான அறிக்கையையும் இரு திறத்தவர்களினதும் சான்றையும் கவனத்திற் கொண்ட பின்னர் பெரும்பான்மை உறுப்பினர்களின் மூலம் அத்தகைய தகைமை பெற்ற ஆளின் மீது விதிக்கப்பட வேண்டிய தடை விதிப்புகள் பற்றிய விதப்புரைகளுட்பட அதன் முடிபைத் தீர்மானித்தல் வேண்டுமென்பதுடன் அதனைப் பணிப்பாளர் தலைமையதிபதிக்கு அறிவித்தலும் வேண்டும்.

16. ஒழுக்காற்றுக் குழுவின் முடிபு பெறப்பட்டதன் மேல், பணிப்பாளர் தலைமையதிபதி அத்தகைய தடை விதிப்புகளை விதிக்கலாமென்பதுடன், இரு திறத்தவர்களுக்கும் பதிவஞ்சல் மூலமான அறிவித்தலொன்றின் மூலம் அறிவித்தலும் வேண்டும்.

17. பணிப்பாளர் தலைமையதிபதியின் முடிபொன்றினால் இன்னலுறும் எவரேனுமாள், அத்தகைய முடிபை அத்தகைய ஆளுக்கு அறிவிக்கின்ற எழுத்திலான தொடர்பாடல் பெறப்பட்ட திகதியிலிருந்து முப்பது நாட்களினுள் அத்தகைய முடிபுக்கெதிராக நிர்மாணத் தொழில் அபிவிருத்திச் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட மேன்முறையீட்டுச் சபைக்கு மேன்முறையீடு செய்யலாம்.

18. இவ்வொழுங்குவிதியில்-

"உயர் தொழில்சார் குழாம்" என்பது, தகைமை வாய்ந்த ஆட்கள், பொறியியலாளர்கள், கட்டிடக் கலைஞர்கள் மற்றும் கணிய அளவையாளர்களைக் கொண்ட முறையே உயர் தொழில்சார் குழுக்களிலிருந்து ஒவ்வொருவரும் பெயர் குறித்து நியமிக்கப்படும் ஆறு உறுப்பினர்கள் உள்ளடங்கலாக பதினெட்டு உறுப்பினர்களைக் கொண்ட உயர் தொழில்சார் குழாம் ஒன்று எனப் பொருள்படும்.

07-253

---

ச. வ. பி. 15/2014

**2014 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க, நிர்மாணத்தொழில் அபிவிருத்திச் சட்டம்**

2014 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க, நிர்மாணத் தொழில் அபிவிருத்திச் சட்டத்தின் 36 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் மேற்கூறப்பட்ட சட்டத்தின் 58 ஆம் பிரிவின்கீழ் நகர அபிவிருத்தி, நீர் வழங்கல் மற்றும் வீடமைப்பு வசதிகள் அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.

**மஹிந்த ராஜபக்ஷ,**
நகர அபிவிருத்தி, நீர் வழங்கல் மற்றும் வீடமைப்பு வசதிகள் அமைச்சர்.

கொழும்பு,
2020, யூன் 08.

ஒழுங்குவிதிகள்

1. இவ்வொழுங்குவிதிகள் 2020 ஆம் ஆண்டின் நிர்மாணத்தொழில் அபிவிருத்தி (பதிவுசெய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்களுக்காக ஒழுக்காற்று நடவடிக்கை முறைக்கான வழிகாட்டு நெறிகள்) ஒழுங்குவிதிகள் என எடுத்துக்காட்டப்படலாம்.

2. இரண்டாயிரத்துப் பதினான்காம் ஆண்டின் 33 ஆம் இலக்க, நிர்மாணத் தொழில் அபிவிருத்திச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் பதிவுசெய்யப்பட்ட ஒப்பந்தக்காரரொருவருக்கெதிரான ஒவ்வொரு முறைப்பாடும் (இதனகத்துப் பின்னர் "அதிகாரசபை" எனக் குறிப்பீடு செய்யப்படும்) நிர்மாணத் தொழில் அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளர் தலைமையதிபதிக்கு எழுத்தில் செய்யப்படுதல் வேண்டும்.

3. இதற்கான அட்டவணையின் நிரல் I இல் குறித்துரைக்கப்பட்ட செயல் அல்லது செய்யாமை ஒன்றைப் புரிகின்ற எவரேனும் பதிவுசெய்யப்பட்ட ஒப்பந்தகாரர், இவ்வொழுங்குவிதிகளுக்கான அட்டவணைக்கான நிரல் II இல் குறித்துரைக்கப்பட்ட தடை விதிப்புக்கு அல்லது தண்டத்துக்கு அமைந்தவராதல் வேண்டும்.

4. (1) பதிவுசெய்யப்பட்ட ஒப்பந்தகாரரொருவர் மோசடியான ஆவணங்களைச் சமர்ப்பித்ததன் மூலம் பதிவைப் பெற்றுக்கொண்டுள்ளாரென்ற சார்த்துதலின் மீது அத்தகைய ஒப்பந்தக்காரருக்கெதிராக ஏதேனும் முறைப்பாடு செய்யப்படுமிடத்து, முதற்றோற்ற அளவிலான சான்றிருப்பின், விசாரணை முடிவுறும் வரை அத்தகைய பதிவு உடனடியாக இடைநிறுத்தப்படுதல் வேண்டும்.

(2) இதற்கான அட்டவணையின் (2) ஆம் விடயத்தின் (அ), (ஆ), (இ), (ஈ) மற்றும் (உ) என்னும் பந்திகளில் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் செயல் அல்லது செய்யாமையின் ஏதேனும் இடம்பெறுகை தொடர்பாக நீதிமன்ற வழக்கு நடவடிக்கை அல்லது நடுத்தீர்ப்பு ஒன்று உள்ளவிடத்து, அந்நீதிமன்ற வழக்கு நடவடிக்கை அல்லது நடுத்தீர்ப்பு முடிவுறும் வரை விசாரணையானது உடனடியாக இடைநிறுத்தப்படுதல் வேண்டும்.

5. இரண்டாம் ஒழுங்குவிதியின் கீழான முறைப்பாடொன்றைப் பெற்றதன் மேல், பணிப்பாளர் தலைமையதிபதி, அத்தகைய முறைப்பாடு பெறப்பட்டதிலிருந்து ஏழு நாட்களைக் கொண்டவொரு காலப்பகுதியினுள், அத்தகைய முறைப்பாட்டை அமைச்சரினால் நியமிக்கப்பட்ட ஒழுக்காற்றுக் குழுவுக்கு ஆற்றுப்படுத்துதல் வேண்டும்.

6. (1) ஒழுக்காற்றுக் குழுவானது, முறைப்பாடொன்று ஆற்றுப்படுத்தப்பட்டதிலிருந்து முப்பது நாட்களைக் கொண்டவொரு காலப்பகுதியினுள், எந்த ஒப்பந்தக்காரருக்கெதிராக முறைப்பாடானது செய்யப்பட்டுள்ளதோ அந்த முறைப்பாட்டாளருக்குப் பதிவஞ்சல் மூலம் அறிவிக்க வேண்டுமென்பதுடன் ஏதேனும் தடை விதிப்பு அல்லது தண்டம் அவர் மீது ஏன் விதிக்கப்படுதலாகாதென முப்பது நாட்களினுள் காரணங்காட்டும்படி அவரைப் பணித்தலும் வேண்டும்.

(2) ஒழுக்காற்றுக் குழு இயைபான எல்லாச் சான்றுகளையும் பதிதல் வேண்டும்.

(3) ஒழுக்காற்றுக் குழுவானது, அவசியமான ஆவணப்படுத்துகையைக் கோருவதன் மூலமும், அமைவிடங்களுக்கு விஜயம் செய்வதன் மூலமும், இயைபான ஒழுங்கமைப்புகளிடமிருந்து விபரங்களைப் பெற்றுக்கொள்வதன் மூலமும் சான்றைச் சேகரிக்கலாம்.

(4) ஒழுக்காற்றுக் குழுவானது, சான்றைப் பகுப்பாய்வு செய்தலும் அதற்கான காரணங்களுடன் அதிகார சபைக்கு விதிப்புரைகளைச் செய்தலும் வேண்டும்.

7. ஒழுக்காற்றுக் குழுவானது, அதன் புலனாய்வை நிறைவுசெய்தலும் ஒழுக்காற்றுக் குழுவுக்கு அத்தகைய முறைப்பாடு ஆற்றுப்படுத்தப்பட்ட திகதியிலிருந்து தொண்ணூறு நாட்களைக் கொண்டவொரு காலப்பகுதியினுள் அதிகார சபையின் பணிப்பாளர் தலைமையதிபதிக்கு அதன் விதப்புரைகளைச் சமர்ப்பித்தலும் வேண்டும்.

8. பணிப்பாளர் தலைமையதிபதி அத்தகைய விதப்புரைகளைப் பெற்றதன் மீது அத்தகைய தடை விதிப்புகளை அல்லது தண்டத்தை விதித்தல் வேண்டுமென்பதுடன் அத்தகைய விதப்புரைகள் பதிவஞ்சல் மூலம் செய்யப்பட்டதிலிருந்து ஏழு நாட்களைக் கொண்டவொரு காலப்பகுதியினுள் ஒப்பந்தக்காரருக்கான அத்தகைய விதப்புரையின் பிரதியொன்றுடன் சேர்த்து அதற்கிணங்க முறைப்பாட்டாளருக்குப் பதிவஞ்சல் மூலம் அறிவித்தலும் வேண்டும்.

9. பணிப்பாளர் தலைமையதிபதியின் முடிபினால் இன்னலுறும் எவரேனுமாள், அத்தகைய முடிபை அத்தகைய ஆளுக்கு அறிவிக்கின்ற எழுத்திலான தொடர்பாடல் பெறப்பட்ட திகதியிலிருந்து முப்பது நாட்களினுள் அத்தகைய முடிபுக்கெதிராக நிர்மாணத் தொழில் அபிவிருத்திச் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட மேன்முறையீட்டுச் சபைக்கு மேன்முறையீடு செய்யலாம்.

10. இவ்வொழுங்குவிதிகளில்–

"பணிப்பாளர் தலைமையதிபதி" என்பது, 2014 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க, நிர்மாணத் தொழில் அபிவிருத்திச் சட்டத்தின் 15 ஆம் பிரிவின் கீழ் நியமிக்கப்பட்ட நிர்மாணத் தொழில் அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளர் தலைமையதிபதி என்று பொருளாகும்.

**அட்டவணை**

(ஒழுங்குவிதி 3)

செயல் அல்லது செய்யாமை மற்றும் தடைவிதிப்பு அல்லது தண்டம்

| இல. | நிரல் I<br>(செயல் அல்லது செய்யாமை) | நிரல் II<br>(தடைவிதிப்பு அல்லது தண்டம்) |
|---|---|---|
| 1. | (அ) அதிகார சபையின் பதிவுப் பதிவேட்டுப் புத்தகத்துடன் குறுக்கிடுதல் அல்லது அதில் அதிகாரமளிக்கப்படாத பதிவு அல்லது மாற்றம் செய்தல் | 1 ஆவது சந்தர்ப்பம் - ஓராண்டுக்குப் பதிவை இடைநிறுத்துதல் ; அத்துடன்<br><br>2 ஆவது சந்தர்ப்பம் - மூன்றாண்டுகளுக்குப் பதிவை இல்லாதாக்குதல் |
| | (ஆ) மோசடி அல்லது பிறழ் பிரதிநிதித்துவம் மூலம் ஒப்பந்தக்காரர் அதிகார சபையுடன் பதிவைப் பெற்றுக்கொண்டுள்ளார். | 1 ஆவது சந்தர்ப்பம் - ஓராண்டுக் காலப்பகுதிக்குப் பதிவை இடைநிறுத்துதல் ; அத்துடன்<br><br>2 ஆவது சந்தர்ப்பம் - மூன்றாண்டு காலப்பகுதிகளுக்குப் பதிவை இல்லாதாக்குதல் |
| 2. | (அ) ஒப்பந்தத்தை இல்லாதாக்குதல் | 1 ஆவது சந்தர்ப்பம் - ஒரு தரத்தினால் தரமிறக்குதல்<br><br>2 ஆவது சந்தர்ப்பம் - 5 வருட காலப்பகுதிக்குள் ஏற்பட்டிருப்பின் இரண்டாண்டுக் காலப்பகுதிக்குப் பதிவை இல்லாதாக்குதல் |
| | (ஆ) அதிகாரமின்றி ஒப்பந்தத்தைக் கீழ் ஒப்பந்த மாக்குதல் | 1 ஆவது சந்தர்ப்பம் - ஒப்பந்தக்காரருக்கு எச்சரிக்கைக் கடிதத்தை வழங்குதல்<br><br>2 ஆவது சந்தர்ப்பம் - ஓராண்டுக்குப் பதிவை இடைநிறுத்துதல் |
| | (இ) வாடிக்கையாளருக்கு மோசடியான ஆவணங் களைச் சமர்ப்பித்தல் அல்லது ஒப்பந்த விலையை நிர்ணயிப்பதற்குக் கூட்டுச்சதி செய்தல்<br><br>(i) முறிகள் சம்பந்தப்பட்டுள்ளவிடத்து<br><br>(ii) ஏனைய சந்தர்ப்பங்கள் | (i) பதிவை இரண்டாண்டுகளுக்கு இல்லாதாக்குதல்<br><br>(ii) 1 ஆவது சந்தர்ப்பம் - ஓராண்டுக்குப் பதிவை இடை நிறுத்துதல்<br><br>2 ஆவது சந்தர்ப்பம் - இரண்டாண்டுகளுக்குப் பதிவை இல்லாதாக்குதல் |
| | (ஈ) உயர் தொழிற்சார் அசட்டை, தகுதியின்மை, ஒழுக்கக்கேடு, துர்ப்பழக்கம், மோசடி அல்லது நேர்மையீனம் | வருடாந்தப் பதிவுக் கட்டணத்தின் ஐந்து மடங்குகளுக்குச் சமமான அதிகபட்சக் குற்றப்பணத்துடன் ஓராண்டுக்குப் பதிவை இடைநிறுத்துதல் |
| | (உ) குறைவான செயல் நிறைவேற்றம் காரணமாக முடிவுறுத்தல் | ஒரு தரத்தினால் தரமிறக்குதல் |

**அட்டவணை** *(தொடர்ச்சி)*

| *இல.* | *நிரல் I* <br> *(செயல் அல்லது செய்யாமை)* | *நிரல் II* <br> *(தடைவிதிப்பு அல்லது தண்டம்)* |
|---|---|---|
| *3.* | (அ) ஒரு வேலைத்தலத்திலான அல்லது அதற்கு நெருங்கிய சுற்றாடலிலான ஒரு விபத்து, வேலைத் தலத்தில் அல்லது அதற்கு நெருங்கிய சுற்றாடலில் ஓராளின் (ஆட்களின்) மரணத்தை விளைவிக்கு மிடத்தும் அதன் விளைவான விசாரணை, விபத் தானது தகுந்த காப்பு நடவடிக்கை முறைகளையும் செயல் முறைகளையும் ஒப்பந்தக் காரர் அமுலாக்கி வேலைத்தளத்திலுள்ள எல்லா ஆட்களும் அவற்றைக் கடைப்பிடிப்பதனை உறுதிப்படுத்துவதற்குத் தவறியமையின் அல்லது அசட்டையாகவிருந்தமை யின் விளைவானதாக விருந்ததென எண்பிக்கப்படு மிடத்தும் | இரண்டாண்டுகளுக்கு ஒரு தரத்தினால் தரமிறக்குதல் ; அத்துடன் தவறுகை புரிந்த நேரத்தில் ஒப்பந்தக்காரருக்கு ஏற்புடையதான அதியுச்ச தர (பிரதான அல்லது நிபுணத்துவ) வருடாந்தப் பதிவுக் கட்டணத்தின் இரண்டு மடங்குகளை ஒத்த குற்றப்பணமொன்றை விதித்தல் |
| | (ஆ) ஒரு வேலைத்தளத்திலான அல்லது அதற்கு நெருங்கிய சுற்றாடலிலான ஒரு விபத்து, வேலைத் தளத்தில் அல்லது அதற்கு நெருங்கிய சுற்றாடலில் ஓராளின் (ஆட்களின்) நிரந்தர இயலாமையை விளைவிக்குமிடத்தும் அதன் விளைவான விசாரணை, விபத்தானது தகுந்த காப்பு நடவடிக்கை முறைகளையும் செயல்முறைகளையும் ஒப்பந்தகாரர் அமுலாக்கி வேலைத்தளத்திலுள்ள எல்லா ஆட்களும் அவற்றைக் கடைப்பிடிப்பதனை உறுதிப்படுத்துவ தற்குத் தவறியமையின் அல்லது அசட்டையாக இருந்தமையின் விளைவானதாகவிருந்ததென எண்பிக்கப்படுமிடத்தும் | ஓராண்டுக்கு ஒரு தரத்தினால் தரமிறக்குதல் ; அத்துடன் தவறுகை புரிந்த நேரத்தில் ஒப்பந்தக்காரருக்கு ஏற்புடையதான அதியுச்ச தர (பிரதான அல்லது நிபுணத்துவ) வருடாந்தப் பதிவுக் கட்டணத்தை ஒத்த குற்றப்பணமொன்றை விதித்தல் |
| | (இ) ஒரு வேலைத்தளத்திலான அல்லது அதற்கு நெருங்கிய சுற்றாடலிலான ஒரு விபத்து, வேலைத் தளத்தில் அல்லது அதற்கு நெருங்கிய சுற்றாடலில் ஓராளின் (ஆட்களின்) பகுதியளவிலான இயலா மையை விளைவிக்குமிடத்தும் அதன் விளைவான விசாரணை, விபத்தானது தகுந்த காப்பு நடவடிக்கை முறைகளையும் செயல்முறைகளையும் ஒப்பந்தகாரர் அமுலாக்கி வேலைத்தளத்திலுள்ள எல்லா ஆட்களும் அவற்றைக் கடைப்பிடிப்பதனை உறுதிப்படுத்துவ தற்குத் தவறியமையின் அல்லது அசட்டையாக இருந்தமையின் விளைவானதாகவிருந்ததென எண்பிக்கப்படுமிடத்தும் | ஆறு மாதங்களுக்கு ஒரு தரத்தினால் தரமிறக்குதல் : அத்துடன் தவறுகை புரிந்த நேரத்தில் ஒப்பந்தக்காரருக்கு ஏற்புடையற்பாலதான அதியுச்ச தர (பிரதான அல்லது நிபுணத்துவ) வருடாந்தப் பதிவுக் கட்டணத்தின் அரை மடங்குகளை ஒத்த குற்றப்பணமொன்றை விதித்தல் |
| *4.* | நுளம்பு இனம் பெருகுகின்ற இடங்களைக் கண்டு பிடித்தல் | *1 ஆவது, 2 ஆவது சந்தர்ப்பம் - தவறு புரிகின்ற ஒப்பந்தக்காரரொருவராக அதிகார சபையின் பெயரை இணையத்தளத்தில் வெளிக்காட்டுதல்* <br><br> *3 ஆவது சந்தர்ப்பம் - ஒரு தரத்தினால் தரமிறக்குதல்* |

*ச. வ. பி. 15/2014*

**2014 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க, நிர்மாணத்தொழில் அபிவிருத்திச் சட்டம்**

*2014 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க, நிர்மாணத் தொழில் அபிவிருத்திச் சட்டத்தின் 42 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் மேற்கூறப்பட்ட சட்டத்தின் 58 ஆம் பிரிவின்கீழ் நகர அபிவிருத்தி, நீர் வழங்கல் மற்றும் வீடமைப்பு வசதிகள் அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.*

**மஹிந்த ராஜபக்ஷ,**
*நகர அபிவிருத்தி, நீர் வழங்கல் மற்றும் வீடமைப்பு வசதிகள் அமைச்சர்.*

கொழும்பு,
*2020, மே 21.*

ஒழுங்குவிதிகள்

*1.* இவ்வொழுங்குவிதிகள் 2020 ஆம் ஆண்டின் நிர்மாணத்தொழில் அபிவிருத்தி (ஆதன அபிவிருத்தியாளர்களைப் பதிவுசெய்தல்) ஒழுங்குவிதிகள் என எடுத்துக்காட்டப்படலாம்.

*2.* ஆதன அபிவிருத்தியாளர் எவரும், (இதனகத்துப் பின்னர் "பணிப்பாளர் தலைமையதிபதி" எனக் குறிப்பீடு செய்யப்படும்) நிர்மாணத் தொழில் அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளர் தலைமையதிபதியினால் அதற்கென வழங்கப்பட்ட பதிவுச் சான்றிதழொன்றின் அதிகாரத்தின் கீழ் தவிர ஏதேனும் ஆதன அபிவிருத்தி வேலையை நிறைவேற்றுதலாகாது.

*3. (1)* (இதனகத்துப் பின்னர் "அதிகாரசபை" எனக் குறிப்பீடு செய்யப்படும்) நிர்மாணத் தொழில் அபிவிருத்தி அதிகார சபையின் கீழ் பதிவுசெய்வதற்கு விரும்புகின்ற ஒவ்வோர் ஆதன அபிவிருத்தியாளரும், அதிகார சபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறானவொரு படிவத்தில், இரண்டாயிரம் ரூபாவான செய்முறைப்படுத்தற் கட்டணமொன்றுடன் சேர்த்து, பணிப்பாளர் தலைமையதிபதிக்கு விண்ணப்பமொன்றைச் செய்தல் வேண்டும். பணிப்பாளர் தலைமையதிபதி, அவசியமானவிடத்து, மேலதிகத் தகவல்களைக் கொடுத்துதவும்படி விண்ணப்பதாரரைத் தேவைப்படுத்தலாம்.

*(2)* ஒரு வெளிப்புற ஆளணியினரினால் ஆலோசனைச் சேவைகள் வழங்கப்படுமிடத்து, அத்தகைய ஆலோசனைச் சேவை தொடர்பான ஒவ்வொரு விண்ணப்பமும், அதிகார சபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறானவொரு படிவத்திலான சத்தியக்கடதாசி ஒன்றுடன் அப்பொருள்பட்ட உடன்படிக்கையொன்றுடன் சேர்த்தனுப்பப்படுதல் வேண்டும்.

*4.* ஒழுங்குவிதி *3 (1)* இன் கீழான ஒவ்வொரு விண்ணப்பதாரரும்-

*(அ)* 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின்கீழ் கம்பெனிகள் பதிவாளரினால் அல்லது (180 ஆம் அத்தியாயமான) வியாபாரப் பெயர்கள் கட்டளைச் சட்டத்தின் கீழ் இயைபான பிரதேச செயலாளரினால் அல்லது இயைபான மாகாணத்தின் நியதிச் சட்டமொன்றின்கீழ் வழங்கப்பட்டவொரு வியாபாரப் பதிவுச் சான்றிதழைக் கொண்டிருத்தல் வேண்டும் ;

*(ஆ)* இலங்கை அரசாங்கத்தினால் பேணப்பட்டதும் இடைநிறுத்தப்பட்ட அல்லது கறுப்புப் பட்டியலிலிடப்பட்ட அபிவிருத்தியாளர்கள் பற்றியதுமானவொரு நடைமுறை நிரலில் உள்ளடக்கப்பட்டிருத்தலாகாது ; அத்துடன்

*(இ)* விண்ணப்பஞ் செய்கின்ற நேரத்தில் சட்டப்படி கடனிறுக்கவகையற்றவராக அல்லது தகுதிவாய்ந்த நீதிமன்றமொன்றினால் வங்கி முறிந்தவரென வெளிப்படுத்தப்பட்டவராக இருத்தலாகாது.

*5.* மூன்றாம் ஒழுங்குவிதியின் கீழான விண்ணப்பமொன்றைப் பெற்றதன் மீது எல்லா ஆவணங்களும் ஒழுங்காகவிருப்பின், பணிப்பாளர் தலைமையதிபதி, 2014 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க, நிர்மாணத் தொழில் அபிவிருத்திச் சட்டத்தின் 42(2) ஆம் பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட குழுவொன்றுக்கு பதினான்கு நாட்களைக் கொண்டவொரு காலப்பகுதியினுள் அதனை ஆற்றுப்படுத்துதல் வேண்டும்.

6. குழுவானது, அத்தகைய விண்ணப்பத்தில் கொடுத்துதவப்பட்ட தகவல்களைக் கவனத்துட் கொண்டதன் மீது, இதற்கான அட்டவணை I இல் தரப்பட்டுள்ளவாறாக அத்தகைய விண்ணப்பகாரரைத் தரப்படுத்துதல் வேண்டும்.

7. விண்ணப்பகாரரொருவர், பின்வரும் முக்கியமான துறைகளின் கீழ் மதிப்பீடு செய்யப்படுதல் வேண்டும் :-

(அ) மொத்த விற்பனை வரவு ;

(ஆ) பின்வருவன தொடர்பாகத் தொழில்நுட்ப ஆற்றல் :

(i) இயைபான ஆதனத்தின் அளவு தொடர்பாகக் கடந்தகாலச் செயல் நிறைவேற்றம், கடந்த ஐந்தாண்டுகளின் போதான ஒவ்வோராண்டிலும் பூர்த்திசெய்யப்பட்ட அபிவிருத்தி வேலை ; அத்துடன்

(ii) உயர் தொழிலர்களை ஈடுபடுத்துதல்.

(இ) பின்வருவன உட்பட ஏனைய கரிசனைகள் :-

(i) சொந்தக்காரரின் தகைமைகள் அல்லது ஒழுங்கமைப்பின் அனுபவம் ;
(ii) ஒழுங்கமைப்புசார் முகாமைத்துவம் ; அத்துடன்
(iii) பெறப்பட்ட அளிப்புக்கள்.

8. ஏதேனும் தெரிவுசெய்யப்பட்ட இடத்துக்கு அமைவிட விஜயம் நிறைவேற்றப்படுதல் தேவைப்படுத்தப்படுமிடத்து, அத்தகைய அமைவிட விஜயத்துக்கான ஆகுசெலவு இதற்கான அட்டவணை II இல் குறித்துரைக்கப்பட்டவாறாக இருத்தல் வேண்டும்.

9. ஒவ்வொரு தரத்துக்குமான புள்ளித் தேவைப்பாடுகள் இதற்கான அட்டவணை III இல் தரப்பட்டுள்ள புள்ளியிடும் திட்டத்துக்கிணங்க இருத்தல் வேண்டும்.

10. குழுவானது அதன் விதப்புரையை முப்பது நாட்களைக் கொண்டவொரு காலப்பகுதியினுள் பணிப்பாளர் தலைமையதிபதிக்கு அனுப்புதல் வேண்டும்.

11. குழுவின் விதப்புரைகளைப் பெற்றதன்மேல், பணிப்பாளர் தலைமையதிபதி, ஒன்றில் விண்ணப்பகாரரை ஆதன அபிவிருத்தியாளரொருவராகப் பதிவுசெய்தலும் இதற்கான அட்டவணை II இல் குறித்துரைக்கப்பட்டவாறான இயைபான கட்டணக் கொடுப்பனவின் மீது முறையான தரப்படுத்தலுடன் வகுதி (1) அல்லது (2) இன்கீழ் அவருக்குப் பதிவிலக்கமொன்றையும் பதிவுச் சான்றிதழொன்றையும் வழங்குதலும் வேண்டும் அல்லது அவரினால் பதியப்பட வேண்டிய காரணங்களுக்காக விண்ணப்பகாரரைப் பதிவுசெய்வதற்கு மறுத்தல் வேண்டும். பணிப்பாளர் தலைமையதிபதி அவரது முடிபு பற்றி விண்ணப்பகாரருக்கு எழுத்தில் அறிவித்தல் வேண்டுமென்பதுடன், பதிவை வழங்குவதற்கான அத்தகையவொரு மறுப்பின் விடயத்தில் அதற்கான அவரது காரணங்களை அவர் குறிப்பிடுதலும் வேண்டும்.

12. வழங்கப்பட்ட ஒவ்வொரு பதிவுச் சான்றிதழும் அதிகாரசபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான படிவத்தில் இருத்தல் வேண்டும். ஒவ்வொரு பதிவுச் சான்றிதழும் அதன்கண் குறித்துரைக்கப்பட்டவாறான காலப்பகுதியொன்றுக்குச் செல்லுபடியுடையதாதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய பதிவுச் சான்றிதழின் அத்தகைய நியதி நிபந்தனைகளுக்கு அமைந்ததாதலும் வேண்டும்.

13. பணிப்பாளர் தலைமையதிபதி, 11 ஆம் ஒழுங்குவிதியின் கீழ் வழங்கப்பட்ட பதிவுச் சான்றிதழொன்றை, அதனை வைத்திருப்பவர் 2014 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க, நிர்மாணத் தொழில் அபிவிருத்திச் சட்டத்தின் ஏற்பாடுகளை, அல்லது அதன் கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளை அல்லது விதிகளை அல்லது அத்தகைய பதிவுச்சான்றிதழின் நியதிகளுள் மற்றும் நிபந்தனைகளுள் எவற்றையும் மீறியுள்ளாரென அவர் திருப்திப்படின், இல்லாதொழிக்கலாம்.

14. (1) பதினோராம் ஒழுங்குவிதியின் கீழ் வழங்கப்பட்ட பதிவுச் சான்றிதழொன்று, அப்பதிவுச் சான்றிதழ் முடிவுறுவதற்கு முன்னர் முப்பது நாட்களுக்குப் பிந்தாமல் பணிப்பாளர் தலைமையதிபதிக்கு அதற்கெனச் செய்யப்பட்டவொரு விண்ணப்பத்தின் மீதும் இதற்கான அட்டவணை II இல் குறித்துரைக்கப்பட்டவாறான இயைபான புதுப்பித்தற் கட்டணக் கொடுப்பனவின் மீதும் புதுப்பிக்கப்படற்பாலதாதல் வேண்டும்.

(2) பதிவுச் சான்றிதழொன்றை வைத்திருப்பவர் 2014 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க, நிர்மாணத் தொழில் அபிவிருத்திச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் அதன் கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளுக்கும் விதிகளுக்கும் அதன்கண் குறித்துரைக்கப்பட்ட நியதி நிபந்தனைகளுக்கும் இணங்கியொழுகியுள்ளாரெனப் பணிப்பாளர் தலைமையதிபதி திருப்திப்படின், அப்பதிவுச் சான்றிதழ் அவரால் புதுப்பிக்கப்படுதல் வேண்டும்.

15. பணிப்பாளர் தலைமையதிபதியின் முடிபினால் இன்னலுறும் ஒவ்வோராளும், அம் முடிபின் முப்பது நாட்களுக்குள் 2014 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க, நிர்மாணத் தொழில் அபிவிருத்திச் சட்டத்தின் 53 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் கீழ் தாபிக்கப்பட்ட மேன்முறையீட்டுச் சபைக்கு மேன்முறையீடொன்றைச் செய்யலாம்.

16. இவ்வொழுங்குவிதிகளில்-

“ஆதன அபிவிருத்தியாளர்” என்பது, 2014 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க, நிர்மாணத் தொழில் அபிவிருத்திச் சட்டத்திலுள்ளவாறான அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

**அட்டவணை I**

*வகுதி வகைகளும் தரப்படுத்துதலும்*

| வகுதி விவரணம் | தரங்கள் | | | | |
|---|---|---|---|---|---|
| (1) சேவைக்கு விடப்பட்ட காணிகளின் (L) விற்பனை - காணித்துண்டுகளின் உரிமையாண்மை உரிமைகளை வாங்குதல், அவற்றை உட்பிரிவிடுதல், உட்கட்டமைப்பை முதலீடு செய்தலும் அபிவிருத்தி செய்தலும் சேவைக்கு விடப்பட்ட காணித்துண்டுகளை விற்பனை செய்தலும் | L1 | L2 | L3 | L4 | L5 |
| (2) விற்பனை செய்வதற்கான/குத்தகைக்கு விடுவதற்கான அல்லது வாடகைக்கு விடுவதற்கான காணிகளும் கட்டிடங்களும் (LB) - காணித்துண்டுகளின் உரிமையாண்மை உரிமைகளை வாங்குதல் மற்றும் கட்டிட அபிவிருத்தியில் முதலீடு செய்தல் மற்றும் விற்பனை செய்தல்/குத்தகைக்கு விடுதல் அல்லது வாடகைக்கு விடுதல் | LB1 | LB2 | LB3 | LB4 | LB5 |

## அட்டவணை II

பதிவுக் கட்டணம்/புதுப்பித்தற் கட்டணம்

| தரம் | வருடாந்தப் பதிவு/புதுப்பித்தற் கட்டணம் (வரி நீங்கலாக) ரூபா |
|---|---|
| L1, L2, L3 | 60,000.00 |
| L4 | 50,000.00 |
| L5 | 45,000.00 |

| தரம் | வருடாந்தப் பதிவு/புதுப்பித்தற் கட்டணம் (வரி நீங்கலாக) ரூபா |
|---|---|
| LB1, LB2, LB3 | 100,000.00 |
| LB4 | 75,000.00 |
| LB5 | 60,000.00 |

அமைவிட விஜயங்களுக்கான ஆகுசெலவு

| விவரணம் | ஆகுசெலவுகள் |
|---|---|
| 1. போக்குவரத்து | விண்ணப்பகாரரினால் ஏற்பாடு செய்யப்படுதல் வேண்டும். |
| 2. நாளொன்றுக்கு | ஆளொருவருக்கு ஒரு நாளைக்கு ரூபா 4,000.00 |
| 3. இரவுத் தங்குகைக்கான உணவும் உறைவிடமும் | விண்ணப்பகாரரினால் ஏற்பாடு செய்யப்படுதல் வேண்டும். |

இயைபான வகுதியின் வருடாந்தப் பதிவுக் கட்டணத்தின் 15% செலுத்துவதன் மூலம் ஒருநாட் சேவை பெற்றுக்கொள்ளப்படுதல் வேண்டும்.

## அட்டவணை III

புள்ளித் தேவைப்பாடு

| தரம் | மொத்த விற்பனை வரவு (பட்டியல் 'அ' ஐப் பார்க்க) | தொழில்நுட்ப ஆற்றல் | | | ஏனைய கரிசனைகள் (பட்டியல்கள் எ, ஏ மற்றும் ஒ ஐப் பார்க்க) (கட்டாயமானதல்ல) | தேவைப்பட்ட மொத்தப் புள்ளிகள் (குறைந்தபட்சம்) |
|---|---|---|---|---|---|---|
| | | வேலை அனுபவம் | | உயர் தொழில்சார் பணி யாட்தொகுதியினர் மற்றும் வேறு தொழில்நுட்பப் பணியாட்டொகுதியினர் | | |
| | | ஒரு கருத்திட்டத் துக்கான குறைந்த பட்சக் காணி இடப்பரப்பு (பட்டியல் 'இ') | மிகப்பெரிய கருத்திட்டம் | | | |
| | குறைந்தபட்சப் புள்ளித் தேவைப்பாடு | காணி இடப்பரப்பு (X) | குறைந்தபட்சப் புள்ளித் தேவைப்பாடு (பட்டியல் 'இ' ஐப் பார்க்க) | குறைந்தபட்சப் புள்ளித் தேவைப்பாடு (பட்டியல் 'உ' ஐப் பார்க்க) | அதிகபட்சப் புள்ளிகளின் குறித்தொதுக்குகை | |
| L1 | 50 | X>1 ஏக்கர் | | | 12 | 100 |
| L2 | 25 | X>1 ஏக்கர் | 15 | 15 | 09 | 66 |
| L3 | 19 | X>1 ஏக்கர் | | | 08 | 60 |
| L4 | 15 | 80<X≤160 பேர்ச்சு | 10 | 12 | 06 | 45 |
| L5 | 6 | X≤80 பேர்ச்சு | 5 | 09 | 03 | 25 |
| தரம் | குறைந்தபட்சப் புள்ளித் தேவைப்பாடு (ஆ) | ஒரு கருத்திட்டத் துக்கான குறைந்த பட்சப் பெறுமதி (X) (பட்டியல் 'ஈ') இரு (மில்லியன்கள்) | குறைந்தபட்சப் புள்ளித் தேவைப் பாடு (பட்டியல் 'ஈ' ஐப் பார்க்க) | குறைந்தபட்சப் புள்ளித் தேவைப் பாடு (பட்டியல் 'ஊ' ஐப் பார்க்க) | அதிகபட்சப் புள்ளிகளின் குறித்தொதுக்குகை (பட்டியல்கள் எ, ஏ மற்றும் ஒ) | தேவைப்பட்ட மொத்தப் புள்ளிகள் (குறைந்தபட்சம்) |
| LB1 | 50 | | | | 13 | 100 |
| LB2 | 25 | X>500 | 15 | 18 | 09 | 72 |
| LB3 | 19 | | | | 08 | 65 |
| LB4 | 15 | 100<X≤500 | 10 | 15 | 06 | 49 |
| LB5 | 6 | X≤100 பேர்ச்சு | 5 | 12 | 04 | 30 |

**வழிகாட்டுப் புள்ளிக் குறித்தொதுக்கல்களுக்கான பட்டியல்கள்**

பட்டியல் (அ) : மொத்த விற்பனை வரவு {சேவைக்கு விடப்பட்ட காணிகளின் விற்பனை (L)}

| *5 ஆண்டுகளுக்கான மொத்த விற்பனை வரவு, (X) இல. ரூ. மில்லியன்கள்* | *அதிகபட்ச புள்ளிகள்* |
|---|---|
| $50 \leq X < 70$ | 70 |
| $35 \leq X < 50$ | 50 |
| $25 \leq X < 35$ | 35 |
| $17 \leq X < 25$ | 25 |
| $10 \leq X < 17$ | 19 |
| $4 \leq X < 10$ | 15 |
| $X < 4$ | 6 |

**பட்டியல் (ஆ) : மொத்த விற்பனை வரவு {(விற்பனை செய்தல், குத்தகைக்கு விடுதல் அல்லது வாடகைக்கு விடுதலுக்காகக் காணிகளையும் கட்டிடங்களையும் அபிவிருத்தி செய்தல்** - (LB)}

| *5 ஆண்டுகளுக்கான மொத்த விற்பனை வரவு, (X) இல. ரூ. மில்லியன்கள்* | *அதிகபட்ச புள்ளிகள்* |
|---|---|
| $1,500 \leq X < 2,000$ | 70 |
| $1,000 \leq X < 1,500$ | 50 |
| $500 \leq X < 1,000$ | 25 |
| $100 \leq X < 500$ | 19 |
| $50 \leq X < 100$ | 15 |
| $X < 50$ | 6 |

**பட்டியல் (இ) : கடந்த 05 ஆண்டுகளினுள் கடந்தகாலச் செயல் நிறைவேற்றமும் அனுபவ ஆண்டுகளும் (சேவைக்கு விடப்பட்ட காணிகளை விற்பனை செய்தல்** - L)

| *தரம்* | *அளவு, பேர்ச்சில்/ஏக்கரில் காணி இடப்பரப்பு (X)* | *பூர்த்திசெய்யப்பட்ட கருத்திட்டம் ஒவ்வொன்றுக்கும் ஒவ்வோராண்டுக்கும் குறைந்தபட்சப் புள்ளிகள்* |
|---|---|---|
| L1, L2, L3 | X > *1 ஏக்கர்* | 6 |
| L1, | $800 < X \leq$ *160* பேர்ச்சு | 4 |
| L5, | $X \leq$ *80* பேர்ச்சு | 2 |

**பட்டியல் (ஈ) : கடந்த 05 ஆண்டுகளின்போது கடந்தகாலச் செயல் நிறைவேற்றம், கருத்திட்டங்களின் பெறுமதி விற்பனை செய்தல்/குத்தகை கொடுத்தல் அல்லது வாடகைக்கு விடுதலுக்கான காணிகள் மற்றும் கட்டிடங்கள் (LB).**

| *தரம்* | *கருத்திட்டத்தின் பெறுமதி (X)/இரு (மில்லியன்கள்)* | *பூர்த்திசெய்யப்பட்ட கருத்திட்டம் ஒவ்வொன்றுக்கும் ஒவ்வோராண்டுக்கும் குறைந்தபட்சப் புள்ளிகள்* |
|---|---|---|
| LB1, LB2, LB3 | 500 <X | 6 |
| LB1 | 100 < X ≤ 500 | 2.5 |
| LB5 | X ≤ 100 | 2.0 |

**பட்டியல் (உ) : தொழில்நுட்ப ஆற்றல் (சேவைக்கு விடப்பட்ட காணிகளை விற்பனை செய்தல் L).**

| *தொழில்நுட்ப ஆற்றல் (சேவைக்கு விடப்பட்ட காணிகளை விற்பனை செய்தல் - (L))* | | *L5* | *L4* | *L1, L2, L3* |
|---|---|---|---|---|
| *உயர் தொழில்சார் வகுதி* | *ஆளொருவருக்கான புள்ளிகள்* | *கட்டாயத் தேவைப்பாடுகள்* | *கட்டாயத் தேவைப்பாடுகள்* | *கட்டாயத் தேவைப்பாடுகள்* |
| பெறுமான மதிப்பீட்டாளர் | 3 | - | √ | √ |
| நில அளவையாளர் | 3 | √ | √ | √ |
| கட்டிடக் கலைஞர் | 3 | - | - | √ |
| பொறியியலாளர் | 3 | √ | √ | √ |
| சட்டவறிஞர் | 3 | √ | √ | √ |
| குறைந்தபட்சப் புள்ளிகள் | | 9 | 12 | 15 |

**பட்டியல் (ஊ) : தொழில்நுட்ப ஆற்றல் {(விற்பனை செய்தல்/குத்தகைக்கு கொடுத்தல் அல்லது வாடகைக்கு விடுதலுக்கான காணிகளும் கட்டிடங்களும் (LB)}.**

| *தொழில்நுட்ப ஆற்றல்* | | *L5* | *L4* | *L1, L2, L3* |
|---|---|---|---|---|
| *உயர் தொழில்சார் வகுதி* | *ஆளொருவருக்கான புள்ளிகள்* | *கட்டாயத் தேவைப்பாடுகள்* | *கட்டாயத் தேவைப்பாடுகள்* | *கட்டாயத் தேவைப்பாடுகள்* |
| பெறுமான மதிப்பீட்டாளர் | 3 | √ | √ | √ |
| நில அளவையாளர் | 3 | √ | √ | √ |
| கட்டிடக் கலைஞர் | 3 | - | - | √ |
| பொறியியலாளர் | 3 | - | √ | √ |
| சட்டவறிஞர் | 3 | √ | √ | √ |
| கணிய அளவையாளர் | 3 | √ | √ | √ |
| குறைந்தபட்சப் புள்ளிகள் | | 12 | 15 | 18 |

ஏனைய கரிசனைகள் (கட்டாயமானவையல்ல)

**பட்டியல் (எ) : ஒழுங்கமைப்பு/தாபனம் : சொந்தக்காரர்களின் தகைமைக்காக/ ஒழுங்கமைப்பின் அனுபவத்துக்காகப் பெறப்பட்ட புள்ளிகள்**

பாகம் I : ஒழுங்கமைப்பு/தாபனம் : சொந்தக்காரர்களின் தகைமைகளுக்காகப் பெறப்பட்ட புள்ளிகள் :

| *சொந்தக்காரர்களின் தகைமை* | *ஆளொருவருக்கு ஏலவேயுள்ள ஆண்டினுள் கிடைக்கக்கூடியது* |
|---|---|
| ஒழுங்கமைப்பொன்று, மேற்படி பட்டியல் (உ) அல்லது பட்டியல் (ஊ) இன்கீழ் தகைமை பெற்றவர்கள் தவிர, உயர் தொழிலாளர்களைக் கொண்ட அதன் பணிப்பாளர் சபையைக் கொண்டுள்ளது. | 0.5 |

பாகம் II : ஒழுங்கமைப்பின் அனுபவம் :

| *ஒழுங்கமைப்பின் அனுபவம்* | *ஆண்டொன்றின் அனுபவத்துக்காக* |
|---|---|
| நிர்மாணம், காணி மீட்புப் போன்ற) ஆதன அபிவிருத்தியுடன் தொடர்புபட்ட வேறு துறைகளில் ஒழுங்கமைப்பின் அனுபவம். | 0.5 |

பட்டியல் (ஏ) : ஒழுங்கமைப்புசார் முகாமைத்துவம் :

| *முகாமைத்துவ முறைமை* | *புள்ளிகள்* |
|---|---|
| தர முகாமைத்துவ முறைமை (ISO 9001) | 5 |
| சூழற்சார் முகாமைத்துவ முறைமை (ISO 14000) | 5 |
| சுகாதார மற்றும் காப்பு முகாமைத்துவ முறைமை (OHSAS 18000/ISO 45001) | 5 |

பட்டியல் (ஒ) : பெறப்பட்ட நிதொஅஅ அல்லது வேறு ஏற்கத்தக்க அளிப்புகளுக்காகக் குறித்தொதுக்கப்பட்ட புள்ளிகள் :

| *ஊக்குவிப்புசார் அம்சங்கள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை* | *ஒரு சமர்ப்பணத்துக்கு/ அளிப்புக்கானதெரிவுக்குப் பெறப்பட்ட புள்ளிகள்* |
|---|---|
| ஒரு விண்ணப்பத்தைச் சமர்ப்பித்தல் | 2.5 |
| அளிப்பொன்றை வெற்றியீட்டுதல் | 5.0 |

*07-262*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.